செய்தி வெளியீடு எண்: 340 நாள் : 14.07.2015

# செய்தி குறிப்பு

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதயதெய்வம், புரட்சித் தலைவி அம்மா** அவர்களின் சீரிய தலைமையில் செயல்படும் அரசு எல்லா காலங்களிலும் முன்னெச்சரிக்கையுடன் செயல்படுகின்ற காரணத்தினால், எந்தவிதமான காய்ச்சல் மற்றும் தொற்று நோய்கள் பரவாமல் தடுக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதயதெய்வம், புரட்சித் தலைவி அம்மா** அவர்களின் ஆணையின்படி தமிழக அரசு பல்வேறு துறைகளுடன் ஒருங்கிணைந்து கொசு ஒழிப்பு, விழிப்புணர்வு ஏற்படுத்துதல், காய்ச்சல் கண்டறிதல், காய்ச்சல் கண்ட இடங்களில் உடனடி தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல், மருத்துவ முகாம்கள் நடத்துதல் போன்ற ஆண்டுதோறும் எடுக்கப்பட்டு வரும் தொடர் நடவடிக்கைகள் காரணமாக தமிழகத்தில் தொற்று நோய்கள் முழுமையாக கட்டுப்படுத்தப்பட்டுள்ளன.

இருந்தபோதிலும், சில பகுதிகளில் மழை காரணமாகவும், பல்வேறு வெளி மாநிலங்களுக்கு பொதுமக்கள் அடிக்கடி பயணம் மேற்கொள்ளுவதாலும், ஏற்படும் காய்ச்சல்களைத் தடுக்க தமிழக அரசு முனைப்புடன் செயல்பட்டு பல்வேறு நடவடிக்கைகள் எடுத்து வருகிறது. கடந்த காலங்களில் டெங்கு பன்றி காய்ச்சல் போன்ற நோய்கள் இந்தியாவில் மற்ற பகுதிகளில் மிக அதிக அளவில் நிகழ்ந்த போதும், **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதயதெய்வம், புரட்சித் தலைவி அம்மா** அவர்களின் ஆணைக்கிணங்க உடனடியாக மேற்கொள்ளப்பட்ட பல்வேறு தடுப்பு நடவடிக்கைகள் காரணமாக இந்த நோய்களின் பாதிப்பு தமிழகத்தில் கட்டுக்குள் கொண்டு வரப்பட்டது.

இந்த ஆண்டு காய்ச்சல் போன்ற தொற்று நோய்கள் பரவாமல் தடுக்க, மேலும் ஏதேனும் இந்நிகழ்வுகள் கண்டறியப்பட்டால் அதை உடனடியாக ஒழிக்க எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதயதெய்வம், புரட்சித் தலைவி அம்மா** அவர்களின் ஆணையின்படி மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர் சி. விஜயபாஸ்கர் அவர்கள் தலைமையில்,

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சி துறை அமைச்சர் எஸ். பி. வேலுமணி அவர்கள் முன்னிலையில்ஆய்வுக் கூட்டம் நடத்தப்பட்டது.

இந்த கூட்டத்தில் சுகாதாரத் துறை செயலாளர் மரு. ஜெ. ராதாகிருஷ்ணன், இ.ஆ.ப., இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி துறை ஆணையர் திரு. மோகன் பியாரே, இ.ஆ.ப., மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை செயலர் எஸ். செந்தில் குமார், இ.ஆ.ப., பேரூராட்சிகளின் இயக்குநர் திரு. ராஜேந்திர ரத்னு, இ.ஆ.ப., நகராட்சி நிர்வாக இயக்குநர் திரு. கோ.பிரகாஷ், இ.ஆ.ப., ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறை இயக்குநர் திரு. கா.பாஸ்கரன், இ.ஆ.ப., தொழிலாளர் நலத் துறை ஆணையர் திருமதி. அமுதா, இ.ஆ.ப., சென்னை மாநகர துணை ஆணையர் திரு. இரா. கண்ணன், இ.ஆ.ப., மருத்துவக் கல்வித் துறை இயக்குநர் மரு. எஸ்.கீதாலட்சுமி, மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்குநர் மரு. அ. சந்திரநாதன், பொது சுகாதாரம் மற்றும் நோய்தடுப்புத் துறை இயக்குநர் மரு. க. குழந்தைசாமி, மருந்து கட்டுப்பாட்டுத் துறை இயக்குநர், திரு. அப்துல் காதர் மற்றும் நகராட்சி நிர்வாகம், ஊராக வளர்ச்சித் துறை, பேரூராட்சி நிர்வாகம், உணவு பாதுகாப்புத் துறை, சுகாதாரத் துறை ஆகிய துறைகளைச் சார்ந்த மாவட்ட அளவிலான அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில், எடுக்கப்பட வேண்டிய தடுப்பு நடவடிக்கைகள் குறித்து கீழ்காணும் முடிவுகள் எடுக்கப்பட்டன.

- எல்லைப்பகுதிகள், இரயில் நிலையங்கள், பேருந்து நிலையங்கள் மற்றும் பொது இடங்களில் சுகாதார விழிப்புணர்வு முகாம்கள் ஏற்படுத்தப்பட்டு இந்த முகாம்களில் பொதுமக்கள் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்த விழிப்புணர்வு பிரசுரங்களை விநியோகித்தல்.
- அனைத்து மாவட்டங்களிலும் மற்றும் உள்ளாட்சி பகுதிகளிலும் ஏற்கனவே மாவட்ட ஆட்சியர் தலைமையில் தொற்றுநோய் தடுப்பு ஒருங்கிணைப்பு கூட்டங்கள் நடத்தப்பட்டு வருகின்றது.

- டெங்கு, சிக்கன்குனியா போன்ற காய்ச்சலை ஏற்படுத்தும் ஏடிஸ் வகை கொசுக்கள் நல்ல தண்ணீரில் உருவாகின்றன. இந்த வகை கொசுக்கள் உருவாகும் இடங்களை கண்டறிந்து அதனை ஒழிப்பதற்கு அனைத்து மாவட்டங்களிலும் சுகாதாரத் துறை மற்றும் உள்ளாட்சி அமைப்பினர் தீவிர விழிப்புணர்வு முகாம்கள் நடத்துதல்.
- அடுத்த 15 நாட்களுக்குள் ஏடிஸ் கொசுக்கள் உருவாகும் டயர்கள், பிளாஸ்டிக் கப்புகள், உடைந்த குடங்கள், போன்ற வீணான பொருட்கள் போர்க்கால அடிப்படையில் அகற்றுதல்.
- கட்டிட பணிகள் நடைபெறும் இடங்களில் தண்ணீர் தேங்கி கொசு உற்பத்தியாகாமல் தடுத்தல்.
- ‘‘எலிசா’’ முறையில் டெங்கு காய்ச்சலை கண்டுபிடிக்க மாவட்ட அளவில் 60 பரிசோதனை மையங்கள் நல்ல முறையில் செயல்பட்டு வருகின்றன.
- இந்திய முறை மருந்துகள், பாரம்பரிய மருத்துவ முறைகளை (நிலவேம்புக் குடிநீர் மற்றும் பப்பாளி இலைச்சாறு அருந்துதல்) ஊக்குவித்து அவை அரசு மருத்துவமனைகளில் எளிதில் கிடைக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.
- எந்தப் பகுதிகளிலும் மூன்றுக்கு மேற்பட்ட நபர்களுக்கு காய்ச்சல் இருப்பது கண்டறியப்பட்டால் அந்த பகுதியில் காய்ச்சல் ஏற்படுவதற்கான காரணத்தினை கண்டறிந்து, அதனை உடனே முற்றிலும் ஒழிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளுதல்.
- காய்ச்சல் அதிகமாக பாதிக்கப்பட்ட மாவட்டங்களுக்கு சிறப்பு மருத்துவக் குழுக்கள் அனுப்பப்பட்டு வருகின்றன. தேவையான இடங்களில் சிறப்பு காய்ச்சல் முகாம்கள் நடத்துதல்.
- காய்ச்சலுக்கு சிகிச்சை அளிக்க தேவையான இரத்த அணுக்கள் பரிசோதனைக் கருவி, மருந்துகள், இரத்தக்கூறுகள் மற்றும் இரத்தம் ஆகியவை போதிய அளவு இருப்பில் வைத்தல்.

பன்றிக்காய்ச்சல் ஏற்கனவே கட்டுப்படுத்தப்பட்டுவிட்டாலும் வெளி மாநிலங்களுக்கு அடிக்கடி பயணம் செய்யும் பொதுமக்கள் மூலமாக தமிழகத்தில் இந்நோய் தாக்கம் ஏற்பட சிறிதும் இடம் கொடாமல் தடுக்க எடுக்கப்பட்ட / எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் முடிவுகள் எடுக்கப்பட்டன.

- வயதானவர்கள், கர்ப்பிணி பெண்கள், குழந்தைகள் போன்ற எளிதாக நோய் தாக்குதலுக்கு உள்ளாகும் பிரிவினருக்கும் தடுப்பு மருந்துகள் மற்றும் சிகிச்சை வசதிகள் செய்தல்.
- பன்றிக்காய்ச்சலை கண்டறிவதற்கு தமிழகத்தில் கிங் மருத்துவ நிலையம் உட்பட 6 சிறப்பு பரிசோதனை மையங்கள் செயல்பட்டு வருகின்றன. இவை தவிர புதுச்சேரி ஜிப்மர் மருத்துவமனையில் ஒரு பரிசோதனை மையம் உட்பட 13 தனியார் மருத்துவ பரிசோதனை மையங்களும் செயல்படுகின்றன.
- பன்றிக்காய்ச்சல் முழுமையாக குணமாக தேவையான டாமிபுளு மாத்திரைகள் அனைத்து அரசு மருத்துவமனைகள் மற்றும் தனியார் மருத்துவமனைகளிலும் தயார் நிலையில் வைத்தல்.
- பன்றிக்காய்ச்சல் பாதிக்கப்பட்ட நபர்களுக்கு சிகிச்சை அளிப்பதற்கென தனியாக சிறப்பு வார்டுகள் தண்டையார்பேட்டை, தொற்று நோய் மருத்துவ மனை, அனைத்து அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனைகள் மற்றும் அனைத்து மாவட்ட மருத்துவமனைகளில் ஏற்படுத்தப்பட்டு தயார் நிலையில் உள்ளன.
- இந்நோய்க்கு தேவையான சிகிச்சை அளிக்கும் மருத்துவர்கள், செவிலியர்கள் மற்றும் மருத்தவம் சார்ந்த பணியாளர்களுக்கு சிறப்பு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.
- இந்நோய் பரவாமல் தடுக்க மருத்துவ பணியாளர்களுக்கு தேவையான தொற்று நோய் தடுப்பு கவசங்கள் போதுமான அளவு இருப்பில் வைக்கப்பட்டுள்ளது.

- மேலும், பன்றிக்காய்ச்சல் சிகிச்சை குறித்து அனைத்து தனியார் மருத்துவர்களுக்கு பயிற்சிகள் வழங்க 3 மருத்துவ கல்லூரி சிறப்பு மருத்துவக் குழுக்கள் அமைக்கப்பட்டு, மாநில முழுவதும் மாவட்டங்கள் தோறும் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.
- மேற்கண்ட டெங்கு மற்றும் பன்றிக்காய்ச்சல் தடுப்பு பணிகளை கண்காணிக்கும் பொருட்டு அரசு தலைமைச் செயலாளர் தலைமையில் சுகாதார துறை, நகராட்சி மற்றும் குடிநீர் வழங்கல் துறை, ஊரக வளர்ச்சி துறை, பள்ளிக் கல்வி துறை, சத்துணவுத் துறை ஆகிய துறைகளின் செயலர்கள் அளவிலான ஆய்வுக் கூட்டங்கள் நடத்தப்பட்டு தடுப்பு பணிகள் முடுக்கி விடப்பட்டுள்ளன.

காய்ச்சல் இருக்கும் இடங்களில், காய்ச்சல் குறித்த விவரங்களை 104 என்கிற கட்டணமில்லா தொலைபேசி எண் மூலமும், 9444340496 என்ற கைபேசி எண் மூலமும், 044–24350496 மற்றும் 044–24334810 தொலைபேசி எண்கள் மூலமும் தொடர்பு கொண்டு பொதுமக்கள் தெரிவிக்கலாம். தகவல் பெறப்பட்டவுடன், அதை கட்டுப்படுத்துவதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் அரசு எடுக்கும்.

காய்ச்சலை பரப்பும் கொசுக்கள் வீடுகளிலும், சுற்றுப்புறங்களிலும் உள்ள உபயோகமற்ற பொருட்களில் தேங்கியுள்ள நீரிலேயே உற்பத்தியாகிறது. அரசு மற்றும் உள்ளாட்சி அமைப்புகள் கொசு மற்றும் கொசுப் புழுக்களை அழிப்பதற்கு தீவிர நடவடிக்கை எடுத்து வருகின்ற போதிலும், இந்த கொசு உற்பத்தியாகும் இடங்களை முழுமையாக ஒழிப்பதற்கு ஒவ்வொரு வீட்டிலும் உள்ள பொதுமக்களும் முழு ஒத்துழைப்பு தரவேண்டும். தங்களது வீடுகளையும், அலுவலகங்களையும், பணிபுரியும் இடங்களையும் தூய்மையாக வைத்துக் கொள்ள வேண்டும் என பொதுமக்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**வெளியீடு:**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**